# சமஷ்டியா, தனிஅரசா தமிழருக்குப்பயன்தரும்?

Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தந்தி ரெலிபோன் எண் : 49

மலர் 9
போன் 889

National Tamil Daily

இதழ் 103
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 11 ஸபர் 14 வியாழக்கிழமை [25-5-67]

## ஜி. ஜி. யும், மாணிக்கமும் முற்றவெளிச் சர்ச்சை

யாழ்ப்பாணம், வியா.

முற்றவெளிக்கூட்டம் முடிவடைந்தபின் நேற்றுமுன் தினமிரவு 10-30 மணியளவில் ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தலைவர் செனட்டர் மாணிக்கத்தை, தமிழ்க்காங்கிரஸ் தலைவர் சந்தித்து மாவட்டசபை பற்றி உரையாடினர். மாவட்டசபை பற்றி இருவரும் பேசியவற்றை மேடையைச் சுற்றி நின்றவர்கள் ஆவலோடு கேட்டுக்கொண்டுநின்றனர்.

திரு. பொன்னம்பலம் கதிரையைவிட்டெழுந்து ஒரு சிகரெட்டைப் புகைத்தபடி செனட்டர் மாணிக்கத்தின் அருகே வந்ததும், மாணிக்கம் எழுந்தார்.

ஜி. ஜி.: தயவுசெய்து தவருக நினைக்காதீர்கள். நீங்கள் இங்கிருந்தபடியால் தான் சமஷ்டிக் கட்சிவிட்ட பிழைகளைக்கூறினேன். இந்த மாவட்டசபையினுல் ஏதாவது நன்மையுண்டெனக் கூறுகிறீர்களா?

மாணிக்கம்: அநேக நாடுகளில் இம்முறையால் சிறுபான்மையினர் பயனடைகின்றனர்.

ஜி. ஜி: அங்கெல்லாம் சிறு

[6-ம் பக்கம் பார்க்க]

# வல்வைச் சம்பவம் பற்றி தனிநபர் விசாரணை கமிஷன் விரைவில் நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, புதன்

வல்வெட்டித் துறையில் சென்றமாதம் 8-ம் திகதி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாகவும் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் வல்வெட்டித்துறையில் அடிக்கடி ஏற்படும் 'தகராறுகள்' சம்பந்தமாகவும் ஆராய்ந்து இதுபோன்ற சம்பவங்கள் இனியும் நிகழாமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென் பது பற்றிச் சிபார்சு செய்யவும் தனிநபர் விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசாங்கம் விரைவில் நியமிக்கவிருப்பதாக அறியப்படுகிறது.

ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவர் இவ்விசாரணைக் கமிஷனராக நியமிக்கப்படக்கூடுமெனத் தெரிய வருகிறது.

வல்வெட்டித்துறையில் சென்ற மாதம் 8-ம் திகதி நடைபெற்ற சம்பவம் பற்றி நீதி விசாரணைக் கமிஷன் அல்லது விசாரணைக் கமிஷன் ஒன்று நியமித்து விசாரணை செய்யவேண்டுமென வட பகுதி எம். பி.க்கள் பலர் பிரதமரைக் கேட்டிருந்தனர். அச்சம்பவத்தில் மாண்ட இளைஞனின் மரண விசாரணை முடிவடைந்துவிட்டதால் விசாரணைக் கமிஷனை விரைவில் பிரதமர் நியமிப்பாரென்று தெரிகிறது.

## யாழ்ப்பாணத்தில் வெசாக் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் நேற்றிரவு வெசாக்தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை, கோப்பாய், சங்கானை, காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் புத்தர் சிலைகளும் அலங்காரப்பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் நாகவிகாரையில் நேற்றிரவு முழுவதும் பிரித் ஓதப்பட்டது. பல நூற்றுக்கணக்கான தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள மக்கள் வெசாக் தினத்தைமுன்னிட்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு யாழ்ப்பாணம் பொலிசார் கேக்குகள், தோடம்பழங்கள், வாழைப்பழங்களை வெசாக் தினத்தைமுன்னிட்டு அன்பளிப்பாக வழங்கினுர்கள். யாழ்ப்பாணத்திலுள்ள சில கடைகளில் வெசாக் தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்குக் குளிர்பானங்களும் வழங்கப்பட்டன. [ந. நி.]

## "சுற்று நிருபங்கள் தமிழில் இருக்கவேண்டும்"

### வட இலங்கை தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சுற்றுநிருபங்கள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும் என்றும், தமிழ் மாணவர்களின் போதனுமொழி தமிழ் மொழியாக இருத்தல் வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கோருவதென வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் 42-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேறறப்பட்டது.

இலங்கையின் எப்பகுதியிலேனும் தமிழ்ப்பாடசாலைகளில் உள்ள காலியான இடங்கள் தமிழாசிரியர்களால் நிரப்பப்படவேண்டுமென்றும், சுயபாஷை ஆசிரியர்களுக்கும் மூன்ரும் தர அதிபர் பதவிகள், வட்டார கல்வி அதிகாரிகள் பதவிகள் ஆகியன வழங்கவேண்டும் எனக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகள் நிறைவேற்

[6-ம்பக்கம்பார்க்க]

## தன்இயக்க முறையில் விமானம்பயணம்

லண்டன், மே 24

பிரிட்டிஷ் விமானக் கம்பனி ஒன்று தன்னியக்க முறையில் விமானம் ஒன்றை செலுத்துவதில் வெற்றிகரமாக ஒருபரீட்சையைநடத்தி முடித்துள்ளது.

16 மைல் தூரம் 27 இடங்களில் தங்கி பின் பறந்துசென்ற இந்த விமானம் 35 மணி நேரம் பிரயாணம் செய்தது. அதை சுமார் 24 நிமிடங்கள் வரை தான் விமானிகள் இயக்கினுர்கள். பிறகு பிரயாணத்தின் எல்லாக் கட்டங்களிலும் விமானம் தன்இயக்க முறையிலேயே இயங்கியது.

தேசங்களுக்கிடையில் காலநிலை மாற்றங்களினுலும், வேறு காரணங்களினுலும்விமானப்போக்குவரத்து தடைப்படாமல் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு இந்தப் பரீட்சை உதவியாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது.

## இரண்டு வாரங்களில் 15 கிடாரங்கள் களவு

### படித்த வாலிபர் கோஷ்டி மீது பொலிசார் கண்வீச்சு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்பொழுது அதிகமாக நடைபெறும் "கிடாரம்" போன்ற பொருட்கள் களவு பொலிசாருக்கு பெரும் பிரச்னையை உண்டு பண்ணியுள்ளது. கடந்த இரு வாரங்களுக்குள் மாத்திரம் சுமார் 15 கிடாரங்கள் பல வீடுகளிலிருந்தும் களவாடப்பட்டுள்ளதாக பொலிசாருக்குச் செய்யப்பட்டுள்ள புகார்களில் இருந்து தெரியவருகிறது.

தற்போது நடைபெற்று வரும் 'கிடாரக்' களவுக்கும் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் ஒரு வாலிபர் கோஷ்டியினருக்குமிடையில் சம்பந்தமிருக்கலாமெனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். சைக்கிள், தந்திக்கம்பி கோழிக்களவுகள் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் துரித நடவடிக்கைகளைத் தொடர்ந்து இப்போது ஓரளவுக்கு ஒழிக்கப்பட்டுள்ளபோதிலும் "கிடாரக்" களவே இப்போது அதிகரித்துள்ளதாகவும் யாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த உயர்தரஅதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். [ந. நி]

## ஆஸ்பத்திரி வார்ட்டில் இருவர் குஸ்தி

### பொலிசார் வருவதை அறிந்ததும் ஓட்டம் பிடித்தனர்

யாழ்ப்பாணம், வியா.

தமது உறவினர்கள் இருவரைப் பார்ப்பதற்கு ஆஸ்பத்திரிக்கு வந்த இரு கோஷ்டியினருக்கிடையே கைகலப்பு ஏற்பட்டது இச்சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள வார்ட் ஒன்றில் நடைபெற்றது.

ஏற்கனவே கைகலப் [illegible] பொன்றில் சம்பந்தப்பட்ட இருவர் காயங்களுடன் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் இருவரையும்

[6-ம் பக்கம் பார்க்க]

## "குண்டு வீச்சையும் ஊடுருவலையும் நிறுத்துங்கள்"

### பாப்பாண்டவர் வேண்டுகோள்

வத்திக்கான், மே 24

வடவியட்னும் மீது அமெரிக்கா நடத்திவரும் குண்டு வீச்சை நிறுத்தும்படியும், தென்வியட்னுமில் ஊடுருவல்களை வியட்காங்கியர் நிறுத்தவேண்டுமென்றும் பாப்பாண்டவர் இன்று கேட்டுக்கொண்டார்.

வியட்னுமிலிருந்து வத்திக்கான்களுக்கு யாத்திரை வந்துள்ளவர்கள் மத்தியில் பாப்பாண்டவர் பேசினுர். கம்யூனிஸ்ட் வியட்காங்கியர் ஊடுருவல்களை நிறுத்தவேண்டும் என்று வடவியட்னுமை அவர் நேரடியாகக்கேட்டுக்கொண்டது இதுவே முதற்தடவை.

வியட்னுமில் போர்நிறுத்தம் ஏற்பட்டால் மட்டும் போதாது. போருக்கான அடிப்படைக்காரணம் நிவர்த்திசெய்யப்படவேண்டும் என்று பாப்பாண்டவர் கூறினுர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

"இறைவா! தங்கள் விருப்பப்படிதான் எதுவும் நடக்கிறது. நான் சுத்த பூஜ்யம். தாங்களே எல்லாம்" என்ற பிரார்த்தனை மூலம் நமது ஆணவ முனைப்பு மறையவும், நமக்குள்ளே இறைவன் இருப்பதை நாம் உணரவும் முடிவதாக இருக்கும்.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு
Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 383

யாழ்ப்பாணம் பிலவங்க ஆண்டு வைகாசி மீ 11உ. (25-5-67)

## புதிய அரசியல் அமைப்பு

இலங்கையின் அரசியல் அமைப்பைத் திருத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பார்லிமெண்ட் தெரிவுக் குழுவிடம் தமிழ் மக்கள் சார்பில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதான அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒருதிட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று செனட்டர் முத்தையா மாணிக்கம் நல்ல யோசனை கூறியிருக்கிறார்.

தமிழ்மக்களின் ஓர் அரசியல் கட்சியிலிருந்து கொள்கை வேறுபாடு காரணமாக வெளியேறி புதிய கட்சி - இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருக்கும் செனட்டர் மாணிக்கம் தமிழ் மக்களுக்கிடையிலும் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலும் ஒற்றுமை ஏற்பட வேண்டியதன் அவசியத்தையும், அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு ஒருமுகப்பட்ட திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறியிருக்கிறார். அவரது நோக்கமும் விருப்பமும் நல்லதுதான். இதையே தமிழ்மக்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இது நடைபெறக் கூடியதா? தமிழ் மக்களுக்கு இன்னல் மேல் இன்னல் ஏற்பட்டபோதிலும் அவற்றைநீக்கி, தமிழ் மக்கள் உரிமைகளுடனும் சுதந்திரமாகவும் வாழ நல்வழி காட்ட இதுவரை தவறியவர்கள் இனியும் எந்த ஒரு விஷயத்திலும் ஒன்று சேருவார்களென எதிர்பார்க்க முடியுமா? ஒற்றுமை ஏற்படாவிடினும் பரவாயில்லை. மேலும் மேலும் பிளவும் வேற்றுமையும் ஏற்படாமலிருந்தால் அதுவே போதுமே!

அரசியல் அமைப்பைத் திருத்துவதுபற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பார்லிமெண்டரித் தெரிவுக் குழுவிலிருந்து எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியேறிவிட்டனர். இப்போதையதெரிவுக்குழு, அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு சில யோசனைகளைத் தெரிவித்தாலும், அவற்றை அரசாங்கம் செயல்படுத்தினாலும் இத்தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்காத எதிர்க்கட்சியினர் சும்மா இருப்பார்களா? அந்தச் சிபார்சுகள்மீது செய்யப்படும் திருத்தம் நிரந்தரமாக இடம்பெற்றுவிடுமா?

இன்றைய எதிர்க்கட்சியினர் நாளை ஆளும் கட்சியினரானால் இந்தத் திருத்தங்களின் விளைவு என்ன?

அரசியல் அமைப்பைத் திருத்துவதில் அல்லது புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் மட்டுமல்லாது பெரும்பான்மைச் சமூகத்தவரின் அரசியல் கட்சிகளுக்கிடையிலும் வேற்றுமையும் பிளவும் உண்டு. ஆயினும் இன்றைய அரசியல் அமைப்பு இலங்கைக்குப் பொருத்தமற்றது என்பதில் எவர் மத்தியிலும் வேறுபாடு இல்லை. அரசியல் அமைப்பைத் திருத்துவதா, புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதா என்பதிலும் இதை யார் பொறுப்பாக இருந்து நிறைவேற்ற வேண்டுமென்பதிலும் தான் போட்டி.

தமிழ்மக்கள், சிங்கள மக்கள் என்ற இனப்பிரிவினையின் அடிப்படையில் அரசியல் அமைப்பைப்புத் திருத்தம்பற்றிச் சிந்திக்காமல் ஜனநாயகத்தையும் தேசிய ஐக்கியத்தையும் பாதுகாக்கக்கூடிய நாட்டில், சகல மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் அல்லது அரசியல் அமைப்பைத் திருத்துவதில் இந்நாட்டிலுள்ள ஜனநாயக அரசியல் கட்சிகளும் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்களும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்ய வேண்டும். இதற்கு பார்லிமெண்ட் பிரதிநிதிகள் மட்டுமல்லாது சமூக, சமய மற்றும் அரசியல் அறிஞர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கக் கூடிய ஓர் அரசியல் நிர்ணயசபையைக் கூட்டித் தான் பார்த்துவிட்டாலென்ன?

# "ஒரு படத்தில் நடிக்க 50,000 ரூபா வாங்குவேன்"

## குறுக்கு விசாரணையின் போது எம். ஜி. ராமச்சந்திரன்

சென்னை, மே 24

"சாதாரணமாக ஒரு படத்தில் நடிக்க 50,000 ரூபாய் வாங்குவேன். பழைய ஒப்பந்தங்களின்படி ஒரு படத்திற்கு 20,000 ரூபா வாங்கியிருக்கிறேன்".

எம். ஜி. ஆர். கொலை முயற்சி வழக்கில் எம். ஆர். ராதாவின் வழக்கறிஞர் திரு. என். டி. வானமாமலை குறுக்குவிசாரணை செய்கையில், நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார். விசாரணையைப் பார்ப்பதற்காக சைதாப்பேட்டை நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

சுமார் மூன்றரை மணி நேரம் சாட்சியமளித்த எம். ஜி. ராமச்சந்திரன் அடிக்கடி தண்ணீர் குடித்தார். அவரது குரல் அடைத்திருந்தது. நீதிமன்றத்திற்கு வெளியில் பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது.

குறுக்குவிசாரணையின் போது எம். ஜி. ராமச்சந்திரன் மேலும் கூறியதாவது:

சினிமாவிலோ நாடகத்திலோ நான் அண்ணன் ராதாவிற்கு கெடுதல் செய்தது இல்லை.

வழ: உங்கள் பிறந்த திகதி என்ன?- 1917 அல்லது 1918 வருடம். உறுதியாக திகதி தெரியவில்லை.

வழ: ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டீர்களா?- இல்லை.

வழ: குலதெய்வம் இராஜகோபாலுக்கும் உங்களுக்கும் ஏதாவது விரோதம் உண்டா?- இல்லை.

வழ: பேசவேண்டிய வசனங்களை நீங்கள் மாற்றுவது உண்டா?- உண்டு.

வழ: செல்வாக்கை பெறக் கூடிய விதத்தில் தான் வசனங்களை நீங்கள் மாற்றுவீர்கள்?- அந்த திறமை எனக்கு இல்லை.

வழ: நீங்கள் நடித்த படங்களில் எல்லாம் வல்லவனாகவும், நல்லவனாகவும் நடித்திருக்கிறீர்களல்லவா?- அப்படித் தான் பாத்திரம் தரப்படுகிறது.

வழ: தி. மு. க. நடத்திய போராட்டங்களில் கலந்து கொள்ளாமலிருக்க உங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதா?-சட்டத்திலோ விதிமுறைகளிலோ அப்படி இல்லை.

எம். ஜி. ராமச்சந்திரன் சாட்சியமளித்த போது கூறியதாவது;-

இடி இடிப்பது போல் சத்தம் கேட்டது. இடது காதிற்குள் எரிச்சலோடு வலி உண்டாகியது. 'ஆ' என்று அலறி கீழே விழுந்து விட்டேன். காதுப் பக்கத்தில் கையை வைத்துப் பார்த்தேன். கையில் ரத்தம் இருந்தது, அப்போது தான் என்னைச் சுட்டு விட்டார் என உணர்ந்தேன். 'அண்ணே ஏன் இப்படி செய்து விட்டீர்கள்' என்று எழுந்தேன். அப்போது ராதா என் எதிரில் துப்பாக்கியுடன் நின்றார். அதற்குள் வாசு அருகில் வந்து 'அடபாவி இந்த மாதிரி சதி செய்து விட்டாயே என்று கூறி ராதாவைப் பிடிக்க ஓடினர். அப்பொழுது ராதா துப்பாக்கியால் தனது வலது நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொண்டு சோபாவில் விழுந்து விட்டார். எனக்கு வலி பொறுக்கமுடியவில்லை. ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்படி கூறினேன். ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலிருந்து பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். அதன் பின் நடந்தது தெரியாது.

என்னைப் பொறுத்தவரை ராதா அண்ணனிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தேன். அதனால் அவர் எனக்கு விரோதியல்ல. ஒரு பத்திரிகையில் என் பெயரைக் குறிப்பிடாமல், அவர் எழுதியிருப்பதை பற்றி பல நண்பர்கள் என்னிடம் கூறினார்கள். ஆனாலும் நான் அது பற்றிக் கவலைப்படவில்லை. அதன் பின்பும் அவரை சில படங்களில் போட வேண்டுமென சிபார்சு செய்திருக்கிறேன்.

வழ ராதா அண்ணன் என்று கூறினீர்களே அவர் இங்கே கோர்ட்டில் இருக்கிறாரா?- கோர்ட்டில் ஆஜராகியிருந்த ராதாவைப்பார்த்து 'இருக்கின்றார்' என்று சிரித்துக் கொண்டே எம். ஜி. ராமச்சந்திரன் கூறினார்.

நாளை காலை தொடர்ந்து எம். ஜி. ராமச்சந்திரன் குறுக்கு விசாரணை செய்யப்படுவார்.

## விசாக திருநாள்

யாழ்ப்பாணம், வியாழன்

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் விசாகத்திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சங்காபிஷேகமும் நடைபெற்றதோடு இரவு சுவாமி அலங்கரிக்கப்பட்டு கைப்பரத்தில் வீதிவலம் வந்தது. விசேஷ மேளக் கச்சேரிகளும் இடம் பெற்றன.

## துறைமுக நாவாய்கழக கோரிக்கைகள்

கொழும்பு, புதன்

துறைமுக நாவாய் இயக்குநர் கழகத்தின் 4-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் பின்வருமாறு:-

இலங்கைஅரசாங்கத்தால் கொழும்பு துறைமுகத்திற்கென வெளிநாட்டில் இருந்து பெறப்படும் இழுவைக் கப்பல், சேறுகோலிக் கப்பல்களுக்கு 'தமிழ்' பெயரும் சூட்டுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

O 1966-ம் ஆண்டு 686-ம் எண்ணுடைய தமிழ் மொழி [விசேட] விதிகளுக்கமைய எமது உறுப்பினர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சி இல்லாதிருப்பதால், துறைமுக ஆணையாளரால் அவர்களுக்கு வழங்கப்படும் உத்தியோக பூர்வமான கடிதங்கள் தமிழிலும் கொடுக்கப்படவேண்டும்.

O தமிழ் ஊழியர்களுக்கு வழங்கும் இலவசப் பிரயாணப் புகையிரதச் சீட்டு தமிழில் எழுதப்பட்டிருக்க வேண்டுமெனவும், துறைமுக ஆணைக்குழு அலுவலகத்தில் உபயோகத்தில் இருக்கும் பத்திரங்கள் யாவும் தமிழில் இருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கிறது.

O எமது வேலை தொழில் நுட்பசம்பந்தமானது. இத்தகைய தொழில் நுட்ப உத்தியோகங் களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சி அத்தியாவசியம் அல்லவென திறைசேரிசுற்றறிக்கை இல. 700ம் 701-ம் வெளிப்படுத்துவதால், எமது உறுப்பினர்கள் சிங்களத்தேர்ச்சி இன்மைக்காக அவர்கள் தொழில் உரிமையைப் பாதிக்கும் நடவடிக்கை எடுக்கக் கூடாதென அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது.

O புதிய தமிழ் ஊழியர் 'சிறுப்பர்' பதவிக்குவிண்ணப்பிக்கும் போது சிங்களத் தேர்ச்சியை வற்புறுத்துவதை துறைமுக ஆணையாளர் நீக்கிவிட வேண்டுமென்று கழகம் தீர்மானித்துள்ளது.

## வருட உற்சவம்

அளவெட்டி, புதன்

யாழ்ப்பாணம் வண்ணைகில்னர் ஒழுங்கை ஸ்ரீமுத்துமாரி அம்மன்கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 27ந்திகதி ரதோற்சவத்துடனும், 28ந்திகதி தீர்த்தத்துடனும், அடுத்தநாள் வசந்தோற்சவத்துடனும் முடிவடையும்.

## மகோற்சவம்

பத்தாவத்தை அர்ச். பிலிப் நேரியார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 26ந்திகதி பாடற்பூஜையுடனும், திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடனும் முடிவடையும்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

தாயத்தார் தமர் நல்நிதி யென்னுமிம்
மாயத்தே கிடந்திட்டு மயங்கிடேல்
காயத்தே யுளன் கானூர் முளையினை
வாயத்தால் வணங்கீர் வினை மாயவே.

—அப்பர் சுவாமிகள்

(பங்காளியர், தம் சுற்றத்தார், நல்ல செல்வம் என்னும் இம்மாயத்திலே கிடந்து மயங்கவேண்டா; நம் உடலுள்ளேயே உள்ளவனாகிய கானூர் முளையாகிய பெருமானை உங்கள் வினைகள் கெட வாயாற் கூறப் பரவிவணங்குவீராக.)

## ஐயாறன் எழுதுவது

சுமார் ஏழுவருட காலம் சிறைப்பட்டிருந்த புத்தரகித்த தேரோ கைதியாகவே ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டார். இச்செய்தியைப் படித்ததும் பழைய பண்டாரநாயக்கா கொலை பற்றிய கதைகள் எல்லாம் சினிமாபோல் மனத் திரையில் காட்சியளிக்கின்றன. பாவம்! எப்படியெல்லாம் இருந்தவர் எப்படி முடிந்தார்!

இம்மாதம் 23ம் திகதிக்குள்ளாக [விசாக் தினம்] தம்மை விடுதலைசெய்யாவிட்டால், பண்டாரநாயக்கா கொலை சம்பந்தமாகச் சகலருடைய பெயர்களையும் தாம் வெளியிடப்போவதாகப் புத்தரகித்த கூறியதாக 'அத்தா' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்றும். அவர் விடுதலை செய்யப்படவில்லை. அக்கொலை சம்பந்தமான பெயர்களை அவர் வெளியிட்டதாகவும் தெரியவில்லை. இதற்குப் பதில், அவரே வெசாக் விழாவுக்கு முதல் நாளிரவு உயிர் நீத்துவிட்டார்.

ஃ ஃ ஃ

'அத்தா' செய்தியில் உண்மை ஏதும் இருப்பின், பண்டாரநாயக்கா கொலையில் வேறு பலரும் சம்பந்தப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. அப்படியாயின், ஏன் இதுவரை புத்தரகித்த அப்பெயர்களை வெளியிடாமல் இருந்தார்.

கொழும்பிலே, இக்கொலை விஷயமாகப் பலபல வதந்திகளைக் கேள்விப்பட்டேன். பண்டாரநாயக்காவைத் தாம் கொலைசெய்யவில்லை என்று பீட்டர் சோமராமாவும் வாக்குமூலத்தில் தெரிவித்தாரென்றாலும் அவரை யார் சுட்டதென்பதைக் கடைசிவரை அவர் தெரிவிக்கவில்லை. பண்டாரநாயக்கா கூட, "மஞ்சள் ஆடை அணிந்த ஒருவர் என்னைச் சுட்டார்" என்றுதான் தமது கடைசி அறிக்கையில் கூறியிருந்தார். சோமராம என்று குறிப்பிடவில்லை. அவருக்குச் சோமராமாவை நன்கு தெரியும். சோமராமா சுட்டிருந்தால் ஏன் அவரது பெயரை பண்டாரநாயக்கா திட்டமாகக் குறிப்பிடவில்லை. சோமராமா சுடவில்லை என்பதற்கு இதுவும் ஓர் அத்தாட்சியா?

மேலும் கொலை நடந்த வீட்டில் ஸ்ரீமதி ஸ்ரீமாவோ இருந்தார். "அம்மே அம்மே" என்று பண்டாரநாயக்கா கூச்சலிட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளே ஓடினார். அப்படியிருக்க ஏன் விசாரணையின்போது ஸ்ரீமாவோ எவ்வித சாட்சியமும் கொடுக்கவில்லை? அந்த வீட்டின் முன்புறம் ஒரு மஞ்சள் உடை கிடந்ததாம். அது யாருடையது? அது எப்படி அங்கு வந்தது?

ஃ ஃ ஃ

"உலை வாயை மூடலாம், ஊர் வாயை மூடமுடியாது" என்று வசனமுண்டு. இவ்வதந்திகளை எல்லாம் கேட்கையில், அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் கொலை மர்மத்தைப் போலவே, பண்டாரநாயக்கா கொலையும் இருக்குமோ என்று தோன்றுகின்றது. இதில்ஒரு முக்கியமான சாட்சியாக இருக்கக்கூடிய புத்தரகித்த திடீரென இறந்துவிட்டார். அவருடன் இந்த மர்மமும் மறைந்துவிட்டதா அல்லது இது வேறு யாருக்கும் தெரியுமா? இனிப் பல வருடம் கழித்து உண்மை வெளியாகுமா?

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசிய நிலைமையை விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்து சபை கூடுகிறது

## எதிர் எதிரான ரஷ்ய-அமெரிக்க நிலைகள்
## போர் மூளும் ஆபத்து அதிகரிக்கிறது





ஐ. நா. (நியுயோர்க்), மே24

**மேற்கு ஆசிய நெருக்கடி பற்றி விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்து சபையின் அவசர கூட்டமொன்று இன்றிரவு நடைபெறுகிறது. இக்கூட்டத்தைக் கனடாவும், டென்மார்க்கும் கோரியிருந்தன. அக் கோரிக்கையை பிரிட்டனும், அமெரிக்காவும் ஆதரித்தன.**

### ரஷ்ய நிலை

மேற்கு ஆசியாவில் வலுத் தாக்குதலில் இறங்கும் எந்தச் சக்தியும், அரபுநாடுகளின் ஒன்றுபட்ட பலத்தை மட்டுமின்றி, சோவியத் நாட்டின் முழு எதிர்ப்பையும் சந்திக்கவேண்டியிருக்கும் என்று சோவியத் பத்திரிகை 'டாஸ்' அறிவித்துள்ளது.

இஸ்ரேல் தானகப்போர்க் குரல் எழுப்பவில்லையென்றும், அதற்குப் பின்னல் ஏகாதிபத்திய சக்திகள் தூண்டுகோலாக விளங்குவதாகவும் 'டாஸ்' மேலும் குறிப்பிட்டது. மேற்கு ஆசியாவில் சமாதானம் நிலவுவது பற்றி ரஷ்யாவுக்கு விசேஷ அக்கறையிருப்பதாகவும், சமாதான முயற்சிகளுக்கு அது தனது ஒத்துழைப்பை நல்குமெனவும்'டாஸ்' மேலும் கூறியுள்ளது.

### ஜோன்சன்கருத்து

அக்காபா வளைகுடாவை ஐக்கிய அரபுக் குடியரசு இஸ்ரேல் கப்பல்களுக்குத் தடைசெய்வது சட்டவிரோதமானதும், அபாயத்தை விளைவிப்பதுமாகும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் தெரிவித்துள்ளார். அக்காபா வளைகுடாவை ஒரு சர்வதேச நீர் வழியாகவே அமெரிக்கா கருதுகிறதென்றும் அவர் கூறினார்.

அவருடைய இந்த அறிவிப்பு, அக்காபா வளைகுடா விவகாரத்தில் பெரிய வல்லரசுகள் தலையிட்டு நிலைமையைச்சீராக்கவேண்டுமென்ற இஸ்ரேல்பிரதமரின் வேண்டுகோளைத் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

இதற்கிடையில், அக்காபா வளைகுடாவில் தமது பலத்தை அதிகரிக்கும்வகையில் நீர்மூழ்கிக்கப்பல்களை அங்கு ஐ. அ. குடியரசு கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

### கெயிரோவில் யு தாண்ட்

கெயிரோவில், ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் நேற்று வந்துசேர்ந்தார். அவர் வந்துசேர்ந்து சிறிது நேரத்தில், சிரியாப் பிரதமர் ஆச்சரிய விஜயம் ஒன்றில் கெயிரோவுக்கு வந்தார். ஏற்கனவே குவெயித் வெளியுறவு மந்திரியும் அங்கு வந்திருந்தார்.

இதுவரை யுதாண்ட், ஐ. அ. குடியரசின் ஜனாதிபதி நாஸரைச் சந்திக்கவில்லை என்று கடைசியாக வந்த செய்திகள் கூறுகின்றன.

அவர் இன்று ஐ. அ. குடியரசின் வெளியுறவு மந்திரியைச் சந்திப்பாரெனத் தெரிகிறது.

### பிரிட்டிஷ் மந்திரிசபை

லண்டனில் இன்று பிரிட்டிஷ் மந்திரிசபையின் அவசர கூட்டமொன்று, மேற்கு ஆசிய நிலைமையை விவாதித்தது. மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற இக்கூட்டத்தில்கலந்துகொண்ட பிரி. வெளியுறவு மந்திரி ஜோர்ஜ் பிரவுண், லண்டனிலிருந்து புறப்பட்டு மாஸ்கோ போய்ச் சேர்ந்தார். அங்கு அவர் சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்.

மேற்கு ஆசிய விவகாரம் சம்பந்தமாக, பிரிட்டிஷ் வெளியுறவுக் காரியாலயத்தைச்சேர்ந்த ராஜ்ய வெளியுறவு மந்திரி தொம்ஸன் பிரபு, வாஷிங்டனுக்கும், நியுயோர்க்குக்கும் செல்லப் புறப்பட்டார்.

### உஷார் நிலை

சவுதி அரேபிய படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

---

## போர் ஓய்விலும் சண்டை
### 10 அமெரிக்கர் கொல்லப்பட்டனர்

சைகோன், மே 24

வியட்னமில் புத்த ஜயந்தியையொட்டிய போர் ஓய்வில், வட வியட்னமியர் தாக்கியதாக அமெரிக்கர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத்தாக்குதலில் 10 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதாகவும், 17 பேர் காயப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---

## 'சீனவின் உதவி நாடுவது தவறு'
### நாகாலாந்து தலைவர் கருத்து

ஷில்லொங், மே 24

சீனவிடமிருந்து நாகாலாந்து ஆதரவு தேடமுயல்வது, நாகாலாந்தின் சாபக்கேடாகவே முடியுமென நாகாலாந்தின்ஆளும் நாகர் தேசிய ஸ்தாபனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

நாகாலாந்துக்குச் சீன ஆதரவு அளிக்க முற்பட்டால் அது சீனவுக்கு நாகாலாந்தின் மீதுள்ள பேராசையையே குறிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

---

## செயற்கை மழை பேச்சுவார்த்தை
### ஜோன்ஸன் அறிவிப்பு

வாஷிங்டன், மே 24

செயற்கை மழையை வருவிப்பது பற்றிப் பாரதத்துடன் அமெரிக்கா நுட்பத்துறைப் பேச்சுவார்த்தைகள் நடாத்தவிருப்பதாக அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் இங்கு ஒரு மாநாட்டில் அறிவித்துள்ளார்.

செயற்கை மழை மூலம் இந்தியாவில் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமையைப் போக்கலாம் என்ற நம்பிக்கையிலேயே இப்பேச்சு வார்த்தைகளில் அமெரிக்கா ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

---

## ரயில் பெட்டிகள் தடம் புரண்டன

புதுடில்லி, மே 24

பூரி-ஹைதராபாத் எக்ஸ்பிரஸ் ரயிலின் மூன்று பெட்டிகள் தடம் புரண்டன. ஒருவர் வெளியே பாய எத்தனித்தபோது தோள்பட்டையில் காயமேற்பட்டது. மற்றும் ஒருவருக்கும் காயமேற்படவில்லை.

---

## பிரிவினை நினைவே தி. மு. க. வுக்கு கிடையாது
### அண்ணு சொல்கிருர்

சென்னை,மே 24

பிரிவினை பற்றிய நினைவே தி.மு.க.கழகத்துக்குக்கிடையாதென தமிழக அரசின் முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை நேற்றுச்சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

குறைந்த விலைக்கு அரிசி கொடுப்பதில் தமிழக அரசுக்கு ஏற்படும்பொருளாதாரப் பளுவைப் பொறுபேற்குமாறு அவர் மத்திய அரசாங்கத்தைக் கோரினர்.

---

## குப்பம் ரயில் விபத்து விசாரணை

சென்னை, மே 24

குப்பம் ரயில் விபத்துப் பற்றிய விசாரணை சென்னையில் நேற்று ஆரம்பமாகியது.

இவ்விபத்தில் 62 பேர் உயிரிழந்தது வாசகர்கள் அறிந்ததே. ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

விபத்துக்குக் காரணம் ரயில் என்ஜின் கோளாருகவே இருக்கவேண்டுமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

---

## மத்திய தரைக் கடலில் பிரிட்டிஷ், அமெரிக்க கப்பல்கள்
### தயார் நிலையில் உள்ளன

கெயிரோ, மே 24

மத்திய தரைக்கடலிலுள்ள சில பிரிட்டிஷ் கப்பல்கள் எதற்கும் ஆயத்தமான நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மத்திய தரைக்கடலினூடாக வீடு திரும்பிக்கொண்டிருந்தவிமானந்தாங்கிக்கப்பல் 'விக்டோரியா' அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

அமெரிக்காவின் 7 வது கடற்படை தனது வழக்கமான மத்திய தரைக்கடல் ரோந்து சுற்றுதலில் ஈடுபட்டது.

ஆனாலும், நெருக்கடிப் பிரதேசத்துக்குச் சில நிமிடங்களில் செல்லக்கூடிய நிலையில் அமெரிக்க 'சூப்பர் சோனிக்' ஜெட் விமானங்கள் நிற்கின்றன.

---

## சிரியா - ஜோர்தான் தூதரக தொடர்பு முறிவு

அம்மான், மே 24

சிரியாவுடன் தனது தூதரகத் தொடர்புகளை ஜோர்தான் முறித்துக் கொண்டுள்ளது.

இங்குள்ள சிரிய தூதரகத்தை மூடிக்கொண்டு, நாட்டை விட்டேகுமாறு அது சிரிய தூதுவருக்கு உத்தரவிட்டுள்ளது.

சென்ற ஞாயிறன்று ஜோர்தானில் ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் 14 பேர் உயிரிழந்தனர். இவ்விபத்திற்கும் சிரியாவுக்கும் சம்பந்தமிருப்பதாக ஜோர்தான் குற்றஞ் சாட்டியுள்ளது.

ஆனல் இந்தக் குற்றச்சாட்டைவெறும் புனைந்துரையென்றும், அதில் எவ்வித உண்மையுமில்லை எனவும் சிரியா மறுத்துள்ளது.

---

# பாரபட்ச அணு ஆயுதபரவல் தடுப்பு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு
## இந்தியப் பிரதிநிதி அறிவிப்பு

ஜெனிவா, மே 24

**அணுஆயுத வல்லரசுகள் பாரபட்சமான அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தமொன்றைத் தயாரிப்பார்களேயானல், புதிய அணு ஆயுத சக்திகள் தோன்றவே வழிகோருவர் என இந்தியப் பிரதிநிதி திரு. திருவேதி இங்கு கூடியுள்ள 17 நாடுகளின் ஆயுதப் பரிகரண மகாநாட்டில் பேசுகையில் எச்சரித்தார்.**

அணுஆயுத உற்பத்தி நாடுகள், சமாதான நோக்கங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்தும் நாடுகளின் நலன்களுக்கு மாருக இவ்வித ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதன் மூலம் அந்த நாடுகளையும் அணுஆயுத உற்பத்திகளில் இறங்குவதற்கான பலமான தூண்டுதலையே அளிப்பரெனஅவர் கூறினர்.

அணு ஆயுத உற்பத்தி நாடுகள், தமது வசதிக்காகச் செய்யும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் ஒன்றுக்காக இந்தியா தனது அணு ஆயுத உற்பத்தி உரிமையை விட்டுக் கொடுக்கத் [illegible] கூறினர்.

### நியாயமற்ற போக்கு

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் அணு ஆயுத உற்பத்தி நாடுகளின் அந்தஸ்து குறைக்கப்படவேண்டியதே நியாயம். ஆனல், இதற்குப் பதிலாக இப்போது தயாராகும் இவ்வொப்பந்தத்தில் அவற்றுக்கு மேலும் உயர்ந்த அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. இது சரியல்ல என்ஞர் திரு. திருவேதி. அணு ஆயுத உற்பத்தியின் ஏகபோக உரிமையின் பாரத்துக்கு அக்கறை கிடையாதென்றும் திரு. திருவேதி கூறினர்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் தமக்குவிரிவானகட்டுப்பாடுகளை விதித்துக்கொள்ளவேண்டிய நேரத்தில் அவ்விதம் செய்யாது, சமாதான நோக்கங்களுக்காக அணுசக்தியை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கே பாரபட்சமான

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

**தரம் உயர்வு**

உடுப்பிட்டி, புதன்

வதிரி உப தபாற்கந்தோர் இம்மாதம் தொடக்கம் 'ஏ' தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. பிரஸ்தாப தபாற்கந்தோருக்கு விரைவில் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்படுமென்றும் தபால் இலாகா அறிவித்துள்ளது.

**வடலி அதிசயம்**

கரவெட்டி மேற்கிலுள்ள வேலுப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான அரசடி மரக்காலை வளவில் சிறிய வடலியொன்றின் வட்டிலிருந்து ஓர் அதிசயபாளை நிலத்தில் தோன்றியுள்ளது. இதனை ஏராளமானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

**பகிரங்க வரவேற்பு**

காங்கேசன்துறை, புதன்

யாழ். மாவட்ட உதவிஅரசாங்க அதிபராகப் பதவியேற்றிருக்கும் திரு. தி. முருகேசம்பிள்ளைக்கும் வலி-வடக்குக் காரியாதிகாரியாகப் பொறுப்பேற்றிருக்கும்திரு. பற்றிக்குக்கும் ஏழாலை கிராமசபையால் ஏழாலை மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 28-ந்திகதி ஒரு பகிரங்க வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

**100-ரூபா பிணை**

கந்தையா தில்லையம்பலம் என்பவர் கோர்ட்டிற்கு வந்தும் விசாரணையின்போது வெளியேநின்றதால் அவரை ஆஜர் செய்யும்படி மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா உத்தரவிட்டார். ஆஜர் செய்யப்பட்டதும் அவர் 100-ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டார்.

**பாரபட்ச அணு...**

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

முறையில் கட்டுப்பாடுகளை விதிக்க முற்பட்டுள்ளன. இவ்வாறு குற்றம் சாட்டினார் இந்தியப் பிரதிநிதி.

**ஆதரிக்க முடியாது**

சீனவைப் பெயரிட்டுக் குறிப்பிடாது, அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டின் அணு ஆயுத தாக்குதலுக்குள்ளாகும் ஆபத்து இந்தியாவுக்கு இருந்து வருவதாக திரு. திருவேதி குறிப்பிட்டார்.

இந்தியாவின் பந்தோபஸ்துக்கு உறுதியளிக்காத எந்த அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தையும் இந்தியா ஆதரிக்க முடியாது என்று திரு திருவேதி கூறினர்.

**கொல்வினுக்கு வாழ்த்து**

அகலவத்தைத் தொகுதி இடைத்தேர்தலில் டாக்டர் கொல்வின் வெற்றிபெற்றதையிட்டு நெசவாளர் சங்கச் சார்பிலும், சிறுபான்மைத் தமிழர் சார்பிலும்ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்கப்பட்டது.

**ஒத்திவைப்பு**

வளலாயைச் சேர்ந்த சீனிப்பிள்ளை என்பவரைத் தகாதவார்த்தைகளால் தூஷித்தும், அவரது முகத்தில் எச்சிலுமிழ்ந்தும் அவமதித்த இராசமணி என்ற பெண் மீது தொடரப்பட்ட வழக்கு ஜூன் 18-ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சீனிப்பிள்ளை தாம்முன்னொரு தடவைகோர்ட்டில் குற்றப்பட்டதாகநீதிபதியிடம்கூறினர்

**ஜீவனும்சம் கட்டாதவர்**

ஊர்காவற்றுறை, செவ்.

காரைநகர் வடக்குவாசியான சண்முகம் சின்னையா என்பவர் அவரது மனைவியான சரஸ்வதிக்கு, ஜீவனும்சப் பணம் கட்டத் தவறியமைக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் நான்கு மாதம்கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

**புதிய நிர்வாகிகள்**

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- திரு.ரி. மோசஸ், காரியதரிசிகள்- திரு. கே. சவிரிமுத்து, திரு. வி.பர்ணபாஸ். தனாதிகாரி- திரு. சிறில். நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

**திருநாள்**

புங்குடுதீவு அர்ச்சவேரியார் ஆலய வருடாந்ததிருநாள் இம்மாதம் 20ம்திகதி நடைபெற்ற பெரிய பாடற்பூஜையுடனும் திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவுற்றது.

**பஸ்பிரயாணிகள்சங்கம்**

சரவணைகிராமபஸ் பிரயாணிகள் சங்கஅமைப்புக் கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பாதுகாவலர் -தீவுப்பகுதி எம்.பி., தலைவர்;- திரு.சி. கணபதிப்பிள்ளை காரியதரிசி .இ. நகுலேசபிள்ளை, தனாதிகாரி- திரு.கே. பத்மநாதன்

**திருவிழாக்கள்**

சரவணை-நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமிகோவில்வருடாந்த உற்சவம் இம்மாதம் 23ம் திகதிரதஉற்சவத்துடனும் வேலணைமேற்கு மகாகணபதிப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம்இம்மாதம் 22 திகதி ரதஉற்சவத்துடனும் முடிவடைந்தன.

**பெண் தற்கொலை**

ஊர்காவற்றுறை-கரம்பன் வாசியான திருநாவுக்கரசு மனைவி கௌரி நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணையின் போது தற்கொலையுண்டவர் கடன் தொல்லையால் மனமுடைந்திருந்தார் எனக் கூறப்பட்டது.

**'டாக்டரை மாற்ற வேண்டாம்'**

ஊர்காவற்றுறைஅரசினர் வைத்தியசாலையில் டி.எம்.ஓ.வாகக் கடமையாற்றும் டாக்டர் திரு.தெய்வேந்திரத்தை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனவும்,, இவரது சேவையை மேலும் இரு வருடங்களுக்காவது நீடிக்க வேண்டுமெனவும்மக்கள் கேட்டுள்ளனர்.

**கடனாகவாவது தர வேண்டும்**

ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குவதால் ஏற்படும் மொத்த நஷ்டமான8கோடி ரூபாவில் பாதியையாவது மத்திய அரசாங்கம் ஏற்க வேண்டுமென முதல் மந்திரி கேட்டுக் கொண்டார்.

குறைந்த பட்சம் கடனாகவாவது பாதித் தொகையை அளிக்க மத்திய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று திரு.அண்ணாதுரை வேண்டுகோள் விடுத்தார்.

**சித்திரத் தேரில் பவனி**

கோப்பாய், புதன்

கோப்பாய் வடக்கு சித்திரவேலாயுத சுவாமி கோவில் இரதோற்சவவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.முருகப் பெருமான் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்தார். அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**வெள்ளோட்டம்**

கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுதசுவாமிகோவிலில் கடந்த 25 ஆண்டு காலமாக நடைபெற்று வந்த தேர்த்திருப்பணி வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து, புதிய தேரின் வெள்ளோட்டம்கடந்த19 ம்திகதி நடைபெற்றது.

**சைக்கிள் பெறப்பட்டது**

பண்டத்தரிப்பு, செவ்.

திருட்டுச் சைக்கிள் என்ற சந்தேகத்தின் பேரில் சங்கானைப் பொலிசார் கைப்பற்றிய சைக்கிள் திரும்பவும் சொந்தக்காரரிடம் கையளிக்கப்பட்டது. இளவாலையைச் சேர்ந்த திரு.செபஸ்தியாம் பிள்ளை என்பவர் சைக்கிள் ஒன்றை விலைக்கு வாங்கியிருந்தார். பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சைக்கிள் கைப்பற்றப்பட்டது.பின்னர் உரியவர் ரசீதுகளைக் காண்பித்து சைக்கிளைப் பெற்றுக் கொண்டார்.

**100 இளைஞர் காணி பெறுவர்**

பண்டத்தரிப்பு பலநோக்குக்கூ.ச.முயற்சியின்பயனாக முத்தையன் கட்டுத்திட்டத்தில் 100 படித்த இளைஞருக்குக்காணிகிடைக்கவிருக்கிறது.மனுப்பத்திரங்கள்யாவும் அந்தக் கிராமசேவையாளர்களுக்கு பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உணவு,வீடு,ஆயுதம் என்பவற்றிற்கும் பணம் கொடுக்கப்படும்.

இளவாலை மாரீசன்பதி கமத்தொழில் விருத்திக்குழுவின் கூட்டம் திரு.ஜெகநாதர் தலைமையில் நடைபெற்றது.பெரிய விளான் கிராம சேவையாளர், விவசாயப் போதனாசிரியர்ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். கமத்தொழில் சம்பந்தமான பல விஷயங்கள் ஆலோசிக்கப் பட்டன.

**பாத்திமா திருநாள்**

பண்டத்தரிப்பு புனித பாத்திமா நாயகியின் திருநாள் சிறப்பாக நடைபெற்றது.பாத்திமாநாயகி காட்சி கொடுத்த 50 வது ஆண்டு விழாவைமுன்னிட்டு ஏராளமானபக்தர்கள்சமுகமளித்திருந்தனர் வண. சிங்கராயர் சுவாமியார் ஆராதனைகளை நடத்தினர்.

**ஆலோசனைக்கூட்டம்**

காரைநகர், செவ்.

சுகாதாரவிழாவை இம்முறை சிறந்த முறையில் கொண்டாடும் நோக்கத்துடன் காரைநகர் பொது சௌக்கிய பரிசோதகரினால் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு காரைநகர் கிராமசபைத் தலைவர் திரு. கா. க. விஸ்வலிங்கம் தலைமைவகித்தார். விழாவை ஜூன் 18-ம்திகதி நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. விழா ஒழுங்குகளைக் கவனிக்க ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இக்குழுவுக்கு காரியதரிசியாக திரு. பரமசாமியும், பொருளாளராக திரு. ரி. சபாரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

**டெலிபோன்**

பண்டத்தரிப்பு, புதன்

பெரியவிளான் உபதபாற்கந்தோருக்குத் தொலைபேசித் தொடர்பு விரைவில் கிடைக்கவிருக்கிறது. இதற்கான முயற்சியைக் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேற்கொண்டிருந்தார்.

**வெள்ளைப் புகையிலை**

இளவாலை - முள்ளானை புகையிலைச் சங்கத்தில்வெள்ளைப் புகையிலை உலர்த்தும் வேலை நடைபெற்று வருகிறது. கடந்த வருடத்தில் புகையிலைப் போறணை ஒன்று தீப்பிடித்து எரிந்ததைத் தொடர்ந்து இவ்வருடம் மிக விழிப்பாக இருக்கின்றனர்.

**பஸ் தரிப்புகள்**

சண்டிலிப்பாய் - கீரிமலை ரோட்டில் இதுவரை குறிக்கப்படாதிருந்த பஸ் நிறுத்தும் இடங்கள் இப்போது குறிக்கப்பட்டிருக்கின்றன.

**விவசாயிகள் கஷ்டம்**

இப்பகுதிகளில் உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் நீர்ப்பாசனத்திற்கு நீரில்லாமல் பெரும் கஷ்டமடைகின்றனர். கடும் வரட்சி காரணமாகக் கிணறுகளில் நீர் வற்றிவிடுவதே இதற்குக் காரணம்.

**கட்டளைக்குரவர்**

சில்லாலை கட்டளைக்குரவராக வண. பொன்னையா சுவாமி நியமிக்கப்பட்டுள்ளார்.


**கலங்கள் வேறு....**

**உள்ளடக்கம் ஒன்றே,**




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனாவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




**எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.**

மகாராஜா ஒர்கனிசேஷன் லிமிட்டெட், பங்கஸால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் விபத்தில் மூவர் மரணம்

புதுடில்லி, மே 24 பிந்த்-கோரியாச் சந்தியில் ரயில் விபத்துக் காரணமாக மூவர் உயிரிழந்ததாக மத்திய ரயில்வே அறிவித்துள்ளது.


### கோழித்தீன்

கோழித்தீன் தயாரிப்பதற்கு வேண்டிய மருந்துகள்- தானியங்கள்-தவிடு-மீன் எண்ணை தொகையாக எம்மிடம் ஆனி மாதம் 15-ம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.
மனேஜர், அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி.
1789

### ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா நடித்த
**பெண்ணே நீ வாழ்க!**

### நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர். - விஜயா நடித்த
**தாயின் மடியில்**

### MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
**SON OF ZORRO**
(Serial)

### REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
**THE LIVELY SET**
9-45 p. m.
**பியார் - கி - பியாஸ்**
முதல் சினிமாஸ்கோப் ஹிந்திப் படம்


# மருமகனைக் கத்தியால் குத்தினர்
## தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

காங்கேசன்துறை, புதன் தனது மாமன் தனக்குக் கத்தியால் குத்திக் காயம் விளைவித்ததாக வழக்கு ஒன்றில் கூறப்பட்டது. சங்கானையை சேர்ந்த பொன்னன் இரத்தினம் என்பவரை நாகமுத்து தம்பிப்பிள்ளை என்பவர் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாக சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பொன்னன் இரத்தினம் மேற்கண்டவாறு சொன்னர்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எதிரி எனக்கு மா மன். இந்த வருடம் பெப்ரவரி மாதம் 6-ம் திகதி இரவு 8-40 மணியளவில் நான்வீட்டிலிருந்து வந்தேன். அப்பொழுது எனக்குப் பின் ஓர் உருவம் வருவது போல் தெரிந்தது. நான் திரும்பிப் பார்த்தபோது எதிரியான எனது மாமனின் கையில் வில்லுக்கத்தி இருந்ததைக் கண்டேன். அதனுல் எனக்கு இடதுபக்கத்திலும் வலது பக்கத்திலும் குத்தினர். சம்பவம் நடந்த இடத்திலிருந்து எனது வீடு 60 யார் தூரயிருக்கும். எனக்கு குத்து விழுந்ததும் எதிரியின் வீட்டுக்காரர் எதிரிக்கு நான் கத்தியால் குத்தியதாகச் சப்தமிட்டார்கள். சிறிது நேரத்தின் பின்னர் நான் பொலிஸ் ஜீப்பில் எடுத்துச் செல்லப்பட்டேன்.

சங்கானைப் பொலிஸ் சார்ஜன்ட் தில்லையம்பலம் தாமோதரம் சாட்சியமளிக்கையில் சம்பவதினத்தன்று, தான் எதிரியை கள்ளுக் கொட்டிலுக்கப்பால் வைத்துக் கைது செய்ததாகவும் பொன்னன் இரத்தினத்தின் நெஞ்சில் காயம் இருந்ததாகவும் கூறினர். வழக்காளி தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் சங்கானைப் பொலிஸாரின் உதவியுடன் வழக்கை நடத்தினர். நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு கைவிரலடையாளம் எடுத்த பின் தீர்ப்பு வழங்குவதை அடுத்தமாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### இசைவிழா

அண்ணுமலை இசைத்தமிழ் மன்றத்தின் ஆதரவில் நல்லூர் மங்கையர்க்கரசிவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்று வரும் 8-வது இசைவிழா இன்றுடன் முடிவடைகின்றது. விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்:-

மாலை 6-00 மணி: மேற்படி இசைத்தமிழ் மன்ற மாணவர்களின் குழுப்பாடல்களும் கதம்ப நிகழ்ச்சிகளும். மாலை 8-00 மணி விசேஷ நாட்டிய நிகழ்ச்சிகள். மாலை 9-00 மணி: கவிஞர் வேல் ஆனந்தன் தயாரித்தளிக்கும் மேற்படி மன்ற மாணவர்களின் 'சங்கிலியன்' நாடகம்.

### கலைவிழா

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெற்றுவரும் பௌர்ணமிக் கலைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:-

இன்னிசை: உரும்பராய் கே. துரைசிங்கம். வாயால் வாத்தியம் இசைத்தல்: கோப்பாய் எஸ். தியாகராசா. நடனம்: திருநெல்வேலி பாரதிகலாமன்றம். மெல்லிசை: 'லிவிங் பொசில்ஸ்' வாத்தியக் குழுவினர். கலையரசு சொர்ணலிங்கம் அளிக்கும் சிறப்பு நிகழ்ச்சி இலங்கை வானெலி புகழ் சொக்கலிங்கம் அளிக்கும் நெருப்புப் பெட்டியில் நாதஸ்வரம் வாசித்தல். மாநகர பொழுதுபோக்குச் சங்கம் அளிக்கும் 'வல்லவர் நால்வர்' சிரிப்பு நாடகம். இரட்டையர் குழுவினரின் மெல்லிசை. [ந.நி.]

### கோவில் புனருத்தாரணம்

பண்டத்தரிப்பு, புதன் இளவாலை வடக்கு ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன. இது ஒரு வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஆலயமாகும்.

### கடிதங்கள் படும் கஷ்டம்

இளவாலை உபதபாற்கந்தோருக்கு இருபாலைக்குப் போக வேண்டிய கடிதங்கள் வந்து சேர்கின்றன. இவை திருப்பியனுப்பப் படுவதால் உரியவர்களுக்குத் தாமதமாகவே கிடைக்கின்றன. இளவாலை - இருபாலை என்ற பெயர்கள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாக இருப்பதே. யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் தபால் தெரிபவர்கள் இத்தவறு விடக் காரணமாகிறதெனத் தெரிகிறது.

### இடமாற்றம்

பெரியவிளான் கிராம சேவகரின் கந்தோர் பெரியவிளான் கிராமசேவகரின் எல்லைக்குள்ளேயே இடமாற்றப்படவிருக்கிறதெனத் தெரிகிறது.

### தவறி விழுந்து மரணம்

சித்திரமேழியைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை என்னும் வயோதிபப் பெண் [70] ஞாயிற்றுக்கிழமை வயல் கிணறொன்றில் விழுந்து மரணமானர். இதுசம்பந்தமாக காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் குரூஸ் விசாரணை நடத்தினர். மரணவிசாரணை அதிகாரி திரு. குமாரகுரு தற்செயல் மரணமெனத் தீர்ப்பளித்தார்.


4-வது வெற்றி வாரம

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி, மனேகர், சீதாலட்சுமி, மாதவி, கள்ளபார்ட் நடராஜன்
திறம்பட நடித்து தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
**குமரிப் பெண்**
இசை: எம்.எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: ராமண்ணு


## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

நிகழும் பிலவங்க வருஷம் வைகாசித் திங்கள் 12ம்நாள் [26-5-67] வெள்ளிக்கிழமை மாலை 5-52 மணி தொடக்கம் 7-22 மணி வரையில் உள்ள விருச்சிய லக்கின சுபமுகூர்த்த வேளையில் எனது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் செல்வநாயகத்துக்கும், திரு. நா. சின்னத்துரை தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி பராசக்திக்கும் திருமணம் செய்யப் பெற்றோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றம் சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். திருமண வைபவம் வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும். கொண்டாட்டம் இரவு 8-00மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் சி. நாகமுத்து [உரிமையாளர்- ஈஸ்வரன் கஞய்ச்],12,புதுரோட், கொட்டடி, யாழ்ப்பாணம். 1844

### விற்பனைக்கு

காணி

வீடும் வளவும் உடனே விற்பனைக்குண்டு. விஸ்தீரணம்- 1 லாச்சம், 1/2 குழி. 24, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். மிகக் கூடுதலான தொகைக்கு அளிக்கப்படும். 25, 26-ம் திகதிகளில் பிற்பகல் 2 மணிக்கும் 6 மணிக்குமிடையில் சொந்தக்காரரைச் சந்திக்கவும். 1846

### ஓவசியர் சங்க வருடாந்தக்கூட்டம்

காங்கேசன்துறை,புதன் வடக்கு,கிழக்கு மாகாண உள்ளூராட்சிஓவர்சியசுங்கம் நேற்றுஉடுவில்கிராம சபை அலுவலகத்தில் தனதுவருடாந்தக்கூட்டத்தை நடத்தியபோதுசம்பள உயர்வுபற்றி மந்திரிக்கு அனுப்பியகடிதத்துக்கு ஒருவித பதிலும் கிடைக்காததால் மீண்டும் ஒருகடிதம்அனுப்பி வைப்பதென தீர்மானிக்கப்பட்டது

**வியாபாரம் பெருக விளம்பரம செய்க**

### கல்வி

வகுப்புகள்

கடந்த மார்கழி க. பொ. த. பரீட்சையில் விஞ்ஞானம், கலை, வர்த்தக பாடங்களில் விசேட சித்தியுடன் சித்தியடைந்திருக்கிறுக்கள். சுருக்கெழுத்து,தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், 6, 3 மாச விசேட வகுப்புகள் ஆரம்பம். பார்வையிட்டு சேர்ந்து படிக்கவும். வர்த்தக கல்லூரி, ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை/நெல்லியடி/உடுப்பிட்டி. 1841

வகுப்புகள்

தபால் அதிபர் தந்தியாளர் பயிற்சி, தாதிகள் பயிற்சி போன்ற அரசாங்க பொதுப் பரீட்சைகளுக்கு வகுப்புகள் நடாத்தப்பெறுகின்றன. விண்ணப்பியுங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, [Jaffna Tutorial College), கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர் / நெல்லியடி, கரவெட்டி. 1823

வகுப்புகள்

சாதாரண உயர்தர வகுப்புகள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன. விஞ்ஞானம். வர்த்தகம், கலை, சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. விபரங்களுக்கு ச. ஞானப்பிரகாசம், நிர்வாகி, வர்த்தக கல்விநிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1826

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூர[illegible]ந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வெளியேற கோரிக்கை

இஸ்ரேல்,சிரியா, ஜோர்டான்,எகிப்துஆகிய இடங்களிலுள்ள பிரிட்டிஷ் அமெரிக்கப்பிரஜைகளை அங்கிருந்து வெளியேறுமாறு பிரிட்டிஷ்,அமெரிக்க அரசாங்கங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.


" எமக்கு தரமான சித்த ஆயுர்வேத மருந்துகள் இதுவரை கிடையாதிருந்தது. அதுகாரணமாக கீழத்தேச மருத்துவத்தின் சிறந்த பலன்களை பொதுசனங்களுக்கு வழங்க வசதியில்லாதிருந்தது. முறைப்படி தயாரித்த தரமான சித்த ஆயுர்வேத மருந்துகளை தாங்கள் தந்து உதவுவதனுல் கீழத்தேச மருத்துவ வளர்ச்சிக்கு வசதியாக அமைந்திருப்பதுடன் பற்பல நோய்களுக்கு சித்திகரமாக சிகிச்சையளிக்கக்கூடியதாகவும்இருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

டாக்டர் வ. இராமநாதன்,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
திருக்கோணமலை.

எமக்கு வரப்பெறும் அநேக கடிதங்களில் இதுவுமொன்று.

**சுந்தரம் பிறதர்ஸ்**
சித்த ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள் விற்பனையாளர்
(புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணமல்போன இளம் ஜோடி

## பொலிசார் தீவிரமாக தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், வியா

காணமல்போன ஒருஇளம் காதல்ஜோடியைக் கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்ஆரியகுளத்தைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் எனக் கூறப்படும் மணியம் என்பவரும் மாணவியான ரூபவதிஎன்ற 14 வயது யுவதியும் காணமல் போய்விட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் இருவருக்குமிடையில்பல மாதமாகவேதொடர்பு இருந்து வந்ததாகவும் சம்பவம்நடந்ததினத்தன்று மாலை காணமற்போனயுவதி பாலசுப்பிரமணியத்துடன் வீட்டைவிட்டு ஓடியதாகவும் பொலிசாரின்விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, பாலசுப்பிரமணியம் யுவதியின் தாயாரைத் தாக்கியதாகவும் பொலிசாருக்கு புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடைசியாகக்கிடைத்த செய்தியின்படி காணமற்போன காதல் ஜோடிகள் வவனியாவில் இருப்பதாகச் செய்தி கிடைத்திருப்பதாகவும் தொடர்ந்து தேடுதல் நடத்துவதாகவும் அறியப்படுகின்றது. [ந.நி]

---

### விற்பனைக்கு

வசாவிளான் சந்திக்குச் சமீபமாகக் கடைக்கிட்டங்கியுள்ள காணி, தோட்டக்காணி, வடலிக்காணிகளாக 4 காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:

திருமதி
ஆச்சிமுத்து முத்துக்குமாரு,
புன்னாலைக்கட்டுவன்.

2302

---

### திருமண அழைப்பு

சிவபாலசிங்கம்-தவமணி.

பண்டத்தரிப்பு வடலியடைப்பு 'சிங்கமணி வாச'த்தில் வதியும் நா. தம்பிமுத்து தம்பதிகளின் மகன், சிவபாலசிங்கம் [மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்] அவர்களுக்கும், வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா, காலஞ்சென்ற இ. கந்தையா ஆகியோரின் சிரேட்ட புத்திரியும், வேலணை மத்திய கல்லூரி ஆசிரியர் இ. க. நாகராசா அவர்களின் சகோதரியுமான தவமணி அவர்களுக்கும் 26-5-1967-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் மணமகள் இல்லத்தில் சைவமுறைப்படி திருமணம் நிகழும். அதேதினம் பி. ப. 4-30 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும். அன்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பு இல்லை. 'சிங்கமணிவாசம்' வடலியடைப்பு பண்டத்தரிப்பு

1845

---

## சுற்றுநிருபங்கள்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றப்பட்டன:-

ஆசிரியர் தராதரப்பத்திர ஆசிரியர்களுக்குச் சம்பள விடயமாக இழைக்கப்பட்ட அநீதியான சம்பளத்திட்டத்தை மாற்றி நியாயமான சம்பளத்திட்டம் உடனடியாக வகுக்கும்படி கோருவது. பாஷை வேறுபாடு இன்றி ஆசிரியர்கள் எல்லோருக்கும் சமதராதரத்துக்குச் சமசம்பளம் வழங்கவேண்டுமெனக் கோருவது. சமய சம்பந்தமாக தலைமை ஆசிரியர்கள் உசிதப்படி விசேட விடுதலையாக 3 நாட்களுக்கு விடுதலை விட அரசாங்கம் அனுமதியளிக்குமாறு வேண்டுவது. ஆசிரியர் இடமாற்றச்சபைகளில் ஆசிரியர்சங்கப் பிரதிநிதிகளுக்கும் மீண்டும் இடமளிக்கும்படி வேண்டுவது. பண்டிதர், வித்துவான், சைவப்புலவர்கள் ஆகியோரைப் பட்டதாரிகளாக அங்கீகரித்து சம்பளம் வழங்கவேண்டுமெனக் கோருவது. இடமாற்றம் பெறும் ஆசிரியர்களை அப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின் அல்லது அதிபரின் சிபார்சின்றி இடமாற்றம் செய்யக்கூடாதெனக் கோருவது. வடபகுதி பாடசாலை மாணவர்களின் சித்திரக்கலை அபிவிருத்திக்காக ஒரு சித்திர வித்தியாதரிசியை நியமிக்கும்படி அரசாங்கத்திடம் வேண்டுவது. [ந. நி.]

---

## சமஷ்டியா,..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பான்மையினர் நல்ல நிலையில் இருக்கின்றனர். வருமானம் உண்டு; வேலையுண்டு பொருளாதார வளமுண்டு. வடக்கு, கிழக்கில் நிலைமை அப்படியல்ல.

மாணிக்கம்: ரஷ்யாவில் கூட இம்முறையால் நன்மையுண்டு.

ஜி. ஜி.: நானும் அறிந்திருக்கிறேன். ஆனல் அங்கு மொழியைப்பற்றிய சர்ச்சை இல்லை. இங்கு மொழிப் பிரச்னை முன்நிற்கிறதே.

மாணிக்கம்: சிறுபான்மையினர் மாவட்டசபையால் பலன் பெறக்கூடும்.

ஜி. ஜி.: மாவட்டசபை வந்தபின் தமிழருக்குமாறான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும். சில மந்திரிகள் கையில்ஆட்சி வந்தால் மாவட்டசபையால் பயன் வருமா?

மாணிக்கம்: அப்படியானல் வேறு வழியென்ன?

ஜி. ஜி.: இலங்கை முழுவதும் சிங்களவருடன் ஒற்றுமையாக வாழவேண்டும் அல்லது பிரிந்து வேறு வழியைப் பார்க்கவேண்டும். இங்கு சமஷ்டி சரிவராது.

மாணிக்கம்: அப்படியானல் பிரிந்துவிடலாம்.

ஜி.ஜி.: அதற்குப்போராடவேண்டும். எல்லோரும் தயாரா. பிரிந்து இங்கு நம்மால் வாழமுடியுமா? பொருளாதாரமுண்டா? இலங்கை, இந்தியா போன்று பெரிதாக இருந்தால், நான் பிரிந்து வாழச் சம்மதிப்பேன். ஆனல் சமஷ்டியை விரும்பமாட்டேன். தமிழரசு பெறத்தான் விரும்புவேன். நேரமாகிவிட்டது. நான் வருகிறேன்.

மாணிக்கம்: போய்வாருங்கள்.

---

வெளிவந்துவிட்டது!

மாணவர்

இரசாயனவியல் கைநூல்

I. வைத்தியநாதர் B. Sc.

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

சுமதி வெளியீட்டகம்

கோவில்வீதி, — யாழ்ப்பாணம்.

1793

---

## பொழுதுபோக்கு விற்பனை வரிகள் வசூல் பற்றி மதியழகன்

சென்னை, மே 24

பொழுது போக்கு விற்பனைவரிகளிலிருந்து வசூலிக்கப்படும்பணம் ராஜ்யத்தின் அரிசி உற்பத்திப்பெருக்கத்துக்கும் அரிசிவிலையினுல் அரசாங்கத்துக்குஏற்படும் நஷ்த்துக்குஈடு செய்யவும்பயன்படுத்தப்படும் என தமிழக உணவுமந்திரி திரு.மதியழகன் இங்குஒருகூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

இந்தவரிகளினுல் கிடைக்கப்படும்பணத்தை ஏமாற்ருமல் முழுதாகச்சேகரிக்க அரசாங்கம் திட்டமிட்டதாக அவர் கூறினுர்.

சாப்பாட்டு விலைகளை உயர்த்த வேண்டாமெனக் கோரியிருந்தபோதும் ஹோட்டல்கள் சாப்பாட்டு விலைகளைக் குறைக்காது உயர்ந்த விலைகளிலேயே அளித்தால், குறைந்த உயர்ந்த விலை உணவுவழங்கும் ஹோட்டல்களை அரசாங்கமே பொறுப்பேற்று நடாத்த வேண்டிவரும்என திரு. மதியழகன் எச்சரித்தார்.

---

## வாலிபர் தற்கொலை

கோப்பாய், புதன்

ஜி.ஸி.ஈ. பரீட்சையில் சித்தியடையாத காரணத்தால் வாலிபர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி மரணமான பரிதாப சம்பவம் ஒன்று இப்பகுதியில் நடைபெற்றது.

உரும்பராயைச் சேர்ந்த செல்லப்பா நீலாம்பரம் [வயது 20] என்னும் வாலிபரே மரணமானவராவர். கோப்பாய் தெற்கில் வசிக்கும் அவரது தமையனுராகிய கே. செல்லையா என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இறந்தவரால் எழுதப்பட்டதெனக் காணப்படும் இரு கடிதங்கள் அவரது சட்டைப்பையினுள்ளிருந்து கிராமசேவகர் திரு.சி. ஆறுமுகத்தினுல் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினுலே தாம் தற்கொலை செய்வதாகவும், அதற்கு யார்மீதும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணை நடாத்தியமரணவிசாரணைஅதிகாரி எஸ். கனகரத்தினம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

---

## ஆஸ்பத்திரி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பார்ப்பதற்கு வந்த அவர்களின் உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்ச்சண்டையே இறுதியில் பலமாகி கைகலப்பாக மாறியதாகவும், இதனுல் இருவரும் ஒருவர் தலைமயிரை மற்றவர் மாறிப்பிடித்தவண்ணம் நிலத்தில் விழுந்து உருண்டதாகவும்சொல்லப்படுகிறது. இதுவிஷயத்தை சம்பந்தப்பட்ட வார்ட் ஊழியர்கள் ஆஸ்பத்திரி பொலிஸாருக்கு தெரிவித்து பொலிசார் ஸ்தலத்துக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் இருவரும் இந்த இடத்தைவிட்டு ஓடிச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது. [ந. நி]

---

## பிரபல்யமான பாடசாலைகளுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து?

### தேசிய கல்விச் சபை ஆலோசனை

கொழும்பு, புதன்

பிரபலமான பாடசாலைகளை பல்கலைக் கழகக் கல்லூரிகளாக அங்கீகரிப்பது பற்றி உயர் கல்விக்கான தேசியசபை விரைவில் ஆராயவிருக்கின்றது.

மாணவர்களுக்கு முதல் சுற்று பரீட்சைகளை நடத்தவும் பட்டமளிப்பதற்கு வசதிசெய்யவும் இந்தப் பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்படலாம். பரீட்சைகளை தேசிய கல்விச்சபையே நடத்தவேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

பல்கலைக் கழகங்களில் ஏற்படும் இடவசதி, பரீட்சை, பட்டமளிப்பு போன்ற நெருக்கடிகளைத்தவிர்க்கவே இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

---

## எம். ஜி. ஆர். மன்றம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்நகர் எம். ஜி. ஆர் மன்றத்தின் அமைப்புக் கூட்டம் அமைப்பாளர் திரு. க. இ. சாமி தலைமையில் நடைபெற்றது. திரு. சி. இராஜமணி வரவேற்புரை கூறினுர். அமைப்பாளர் மன்றத்தின் நோக்கத்தை விளக்கினுர். திரு. சத்தியமூர்த்தி, திரு. நாதன் ஆகியோரும் பேசினர்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: நாதன், பொதுச்செயலாளர்: சத்தியமூர்த்தி, செயலாளர்: ஈழமாறன், பொருளாளர் க. இ. சாமி, துணைச்செயலாளர்: வேலாயுதம், துணைப்பொருளாளர்கள்: அழகர்சாமி, பாலசுப்பிரமணியம். மற்றும் செந்தில்நாதின், ஐயாத்துரை, க. குணநாயகம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## ஈழத்தமிழர் விடுதலைஇயக்க கமிட்டிக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

ஈழத்தமிழர் விடுதலை இயக்க முன்னணியின் கமிட்டிக்கூட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் அம்மன் வீதியிலுள்ளவீடொன்றில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விசேஷமாக செனட்டர் மாணிக்கமும் கலந்துகொண்டார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்த பல முக்கிய உறுப்பினர்களும், வேறொரு தமிழ்க் கட்சியின் வாலிப முன்னணியைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிகின்வது.

விடுதலை இயக்க கொள்கைகளுக்கு அமைய அவைகளை விட்டுக்கொடுக்காதபடி அதனுடன் ஒத்துப்போகக்கூடிய எந்தக் கட்சியுடனும் இணையச் சித்தமாகவிருப்பது பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தெரிகின்றது.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் மாவட்ட சபை மசோதா, கட்டாயநாடுகடத்தல், இன்றைய அரசியல் நிலை ஆகியன பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தெரிகின்றது. [ந. நி.]

---

## பிரி: தூதரகத்தின் முன்னல் மீண்டும் சீனர்கள் ஆர்ப்பாட்டம்

ஹொங்கொங், மே24

பீகிங்கில் பிரிட்டிஷ் தூதரகம் முன்னிலையில் மீண்டும் புதிய ஆர்ப்பாட்டங்களை சீனர்கள் நடத்தினுர்கள். ஹொங்கொங்கிலும் கௌலுங் நகரிலும்நடந்தஆர்ப்பாட்டங்களில் குறைந்தது 200 சீனர்களாவது கொல்லப்பட்டிருக்கலாம் என்று பீகிங்கிற்கு கிடைத்த செய்திகளைத்தொடர்ந்து பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின்முன் புதிய ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின.

---

## 3 ஜோடி கண் தானம்

கொழும்பு, புதன்

தென்வியட்னும் மக்களுக்கென இன்றிரவு இலங்கை கண்தானசபைமூன்றுஜோடி கண்களை அனுப்பிவைத்துள்ளது. வெசாக்விழாவையொட்டி இந்ததானம்செய்யப்பட்டுள்ளது.

---

## அகாபார்குடா தாராறு பிரிட்டன் நடவடிக்கை

லண்டன், மே24

இஸ்ரேலுக்கு செல்லும் அகாபார் வளைகுடா சடல் பாதையை அரபுக்குடியரசு மூடிவிட்டதை தொடர்ந்து உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இப்பாதையை மூடாமல் செய்வதற்கு உலக நாடுகளின் நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் உதவியும் ஆதரவும் அளிக்கும்என்று பிரிட்டிஷ் பிரதமர் இன்று கூறியுள்ளார்.

---

## வர்ணப்படம்

நியூயோர்க், மே24

'சர்வயர்3' என்ற அமெரிக்க விண்வெளிக்கப்பல் ஏப்ரல் 24ம்திகதி சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையில் பூமி இருந்தவேளையில் வர்ணப்படம் ஒன்றை எடுத்திருக்கின்றது. இதற்குமுன் எடுக்கப்படாதது என்றுகருதப்படும் இப்படம் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

---

## தேவநாகரி எழுத்துக்கள்

புதுடில்லி, மே24

புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ளதேவநாகரி வரி எழுத்துக்சள் பிராந்திய மொழிகளை அழித்து விடுவதற்காக தயாரிக்கப்படவில்லையென்றும் பிராந்திய மொழிகளை இணைப்பதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளதுஎன்றும் அறிவிப்கப்பட்டுள்ளது.

---

## 100பேர் மரணம்

ரங்கூன்மே, 24

சமீபத்தில் பர்மாவில் ஏற்பட்ட புயலின்காரணமாக சுமார் 100பேர் இறந்திருக்கலாமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

---

### இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்

மாதகல் சென். தோமஸ் ஆலயக் குட்டிக் குரவர் வண. தேவராஜன் பருத்தித்துறைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org